(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(11).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 மார்ச் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

25/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு நீக்கப்பட்ட புகையிரத பெட்டிகளில் திருத்தப்பட்டு மீண்டும் சேவைக்குள் இணைக்கப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத பெட்டிகளை திருத்தியமைத்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) இதற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேவையிலிருந்து நீக்கப்பட்ட எஞ்சிய புகையிரத பெட்டிகளை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சு வசமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

171/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லோ லெவல் வீதியில் அம்பதலே தொடக்கம் ஒருகொடவத்த வரையிலான பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீதிக்கான அபிவிருத்திப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் ;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு எஞ்சியுள்ள அளவு;

(ii) மேற்படி வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுள் ஏற்கனவே நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈட்டுத் தொகை;

(iii) மேற்கொண்டும் நட்டஈடுகள் வழங்கப்படவிருக்குமாயின் குறிப்பிட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈடாக வழங்கப்படும் தொகை மற்றும் நட்டஈடு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதை தனித்தனியாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

181/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் எழுவைத்தீவு 4 வது வலயத்தைச் சேர்ந்த ஆறு பெண் பிள்ளைகளின் தந்தையாகிய திரு. அன்ரனி யேசுதாசன் கடந்த 2014.12.19 ஆம் திகதி எழுவைத்தீவு கடலில் தொழில் செய்து கொண்டிருந்தவேளை கடற்படையினரின் டோறாப்படகில் மோதி உயிரிழந்தார் என்பதையும்;

(ii) இலங்கை கடற்படையினரின் கவனயீனம் காரணமாக நிர்க்கதியாகியுள்ள யேசுதாசன் அவர்களின் பெண் பிள்ளைகளுக்கு இழப்பீடு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இது வரை இழப்பீடு வழங்கப்படவில்லை யென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அப் பிள்ளைகளுக்கு எப்போது இழப்பீடு வழங்கப்படும் என்பதையும்;

(ii) மேற்படி மரணம் தொடர்பாக நான்கு ஆண்டுகளுக்கு முன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த வழக்கின் இலக்கம், யாரால், எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்பதையும்;

(iv) படகொன்றில் மோதி இறந்ததற்கான வலுவான சாட்சிகள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்த போதிலும் இதுவரை ஏன் நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடற் படையினரும் பொலிசாரும் அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) பிள்ளைகளுக்கு அத்தகைய அழுத்தம் கொடுக்கப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

196/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தொடர்ச்சியாக ஒன்பது மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்சாரத் துண்டிப்பு காரணமாக இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நட்டம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

240/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

263/2020

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 - 2019 பெரும்போகத்தின் போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மாத்தறை மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு சேதம் ஏற்பட்டதென்பதையும்;

(ii) அதற்கான நட்டஈடுகள் இதுவரையில் செலுத்தப்படவில்லையென்பதையும்;

(iii) அதன் காரணமாக விவசாயிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த போகத்தின் போது மாத்தறை மாவட்டத்தில் சேதமடைந்த செய்கை நிலப் பரப்பு யாதென்பதையும்;

(ii) அதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இதுவரை நட்டஈடு செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

431/2020

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதையும்;

(ii) அந்த அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அளவ்வ மற்றும் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக நிர்மாணிக்கப்படுவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த சாலை நிர்மாணிப்பதற்காக மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிக்கப்புகளுக்கென நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், நியாயமான இழப்பீட்டுத் தொகையை வழங்கத் திட்டமிட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

457/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் கல்கிரியாகம சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவின் கல்கிரியாகம குடும்ப சுகாதாரச் சேவைகள் உத்தியோகத்தர் பிரிவில் மகப்பேற்று சிகிச்சை நிலையம் நடாத்துவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் உள்ள எவ்வித வசதியும் இல்லாத சிறிய அறையொன்றில் குறித்த சிகிச்சை நிலையம் நடாத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) அக்காரணத்தினால், கர்ப்பிணித்தாய்மார்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கல்கிரியாகம குடும்ப சுகாதாரச் சேவைகள் உத்தியோகத்தர் பிரிவுக்கு மகப்பேற்று சிகிச்சை நிலையமொன்றை வழங்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

536/2020

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அரசாங்க நெற் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நெற் களஞ்சியசாலைகள் ஒவ்வொன்றிலும் களஞ்சியப்படுத்தக் கூடிய கொள்ளளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி ஒவ்வொரு நெற்களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு போகத்திற்கமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நெற் களஞ்சியசாலைகளின் வலைப்பின்னலை அநுராதபுரம் மாவட்டத்தில் மேலும் விரிவாக்குவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

720/2020

கௌரவ கயந்த கருணாதிலக்க,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2016 ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்காக 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்படவிருந்த திருத்தப்பட்ட சம்பளம் செலுத்தப்படுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டுக்கான கணக்கு வாக்குப் பணத்தின் மூலம் அதிகரிக்கப்படவிருந்த திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சம்பளம் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளத்தையும் அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பெறுநர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

724/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஔடத விற்பனை நிலையங்கள் (ஒசுசல மருந்தகங்கள்) நிறுவப்படவில்லையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் வசிக்கும் சாதாரண மக்கள் சில ஔடதங்களைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டங்களில் இற்றைவரையில் அரச ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் அரச ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

730/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் —

(i) வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் தேவை யாது என்பதையும்;

(ii) ஆகக்கூடிய நன்னீர் மீன் அறுவடையைப் பெற்றுத்தரும் மாவட்டம் யாது என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மாதாந்த நன்னீர் மீன் அறுவடை எவ்வளவு என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் விடப்பட்ட மீன் குஞ்சுகளின் அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில், மேற்படி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்பட்ட மீன் அறுவடை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) விடப்பட்ட மீன் குஞ்சுகளுக்கு ஒப்பீட்டு ரீதியாக பெறப்பட்ட மீன் அறுவடை தொடர்பில் திருப்தி அடைவாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) சிறிய குளங்களைச் சார்ந்து நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

783/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1989 – 1990 காலப்பகுதியில் அரசாங்க ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆசிரியர்கள் ஓய்வுபெறும் கட்டத்தை அண்மித்துள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் ஆசிரியர் சேவையில் பெருமளவிலான வெற்றிடங்கள் ஏற்படுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இந்த நிலைமையை சமநிலைப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

858/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தல் காலத்தில், அரசியல் நட்பு அடிப்படையில் சமுர்த்தி இயக்கத்தின் நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் சமுர்த்தி வங்கி பணியாட்டொகுதியினருக்கு அரசியல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் சட்டத்திற்கு முரணானதென தேர்தல் ஆணைக்குழுவினால் அப்போதைய அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக நடப்பு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015.01.12 முதல் 2015.06.26 வரையான காலப்பகுதியில் சமுர்த்தி விடயத்திற்குப் பொறுப்பாக பணியாற்றிய அமைச்சர் ஒரு இலட்சம் ரூபா கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு வழங்கப்பட்ட கடன்களில் இதுவரை அறவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலும் அறவிடப்படுவதற்கு மீதியுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

மாவட்ட அடிப்படையில் தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) அப்போதைய அரசாங்கம் அரசியல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் இக்கடனை வழங்கியுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இவ்வாறு தவறான முறையில் கடன் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

1082/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை;

(iii) குறித்த ஊழியர்களில் இது வரையில் கோவிட்-19 நோய் தொற்றியுள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கோவிட்-19 நோய் தொற்றியுள்ளமையானது அந்நாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவாரா?

(ii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

47/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இலங்கையில் தற்போதுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் எனப்படும் வைன் ஸ்டோர்ஸ்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையத்தினதும் அனுமதிப்பத்திரமுடையவர்களின்;

(i) பெயர்கள்;

(ii) முகவரிகள்;

(iii) அனுமதிப்பத்திர இலக்கங்கள்;

(iv) அனுமதிப்பத்திரம் முதற் தடவையாக வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது வருடம்;

(v) அவ்விற்பனை நிலையங்கள் நடாத்திச்செல்லப்படும் இடங்களின் முகவரிகள்;

வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2000ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையின் வருடாந்த மதுபான நுகர்வு;

(i) செறிவு சதவீதம்;

(ii) ஒவ்வொரு வியாபாரப் பெயர்;

என்பவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

177/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் பிரதான வைத்தியசாலையொன்றாகிய கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பதின்மூன்று மாடிகளைக் கொண்ட வாட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

197/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சக்தி அமைச்சு தற்போது பேணப்பட்டுவரும் இடத்தின் முகவரி யாது;

(ii) அமைச்சு பேணப்பட்டுவரும் கட்டிடத்தின் உரிமையாளரது பெயர் மற்றும் முகவரி என்பன யாவை;

(iii) மேற்படி கட்டிடத்திற்காகச் செலுத்தப்படும் மாதாந்த வாடகை எவ்வளவு;

(iv) இலங்கை மின்சார சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதொரு சந்தர்ப்பத்தில் மின்சக்தி அமைச்சினைப் பேணிவரும் கட்டிடத்திற்கு மாதாந்தம் பெரும் தொகை வாடகை செலுத்தப்படுவது தொடர்பில் தெரிவிக்கும் கருத்து யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

241/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி பெரிய வெங்காயங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பெரிய வெங்காயங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பெரிய வெங்காயங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

353/2020

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரத்தில் அமைந்துள்ள திசா வாவி பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக மாசடைந்துள்ளது என்பதையும்;

(ii) குடிநீர்த் தேவைகளுக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் நீரைப் பெற்றுக் கொள்வதால் முன்பிருந்தே இந்த வாவியில் நீராடுதல், துணி துவைத்தல் போன்ற மனித செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டிருந்தன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) திசா வாவியின் நீரை தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

537/2020

கௌரவ ரோஹண பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வேலைத்திட்டம் -

(i) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் இதுவரையில் பயன்களைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வேலைத்திட்டத்தை நிறுவத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

553/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய வீதிகள், மாகாண வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் நீளம் பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வீதிகளில்,—

(i) காபட் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(ii) தார் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(iii) காபட் அல்லது தார் இடப்படாத வீதிகளின் நீளம்;

எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிட்ட கிராமிய வீதிகளின் நீளம் தனித்தனியாக உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

595/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின், நெடுந்தீவில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்தியசாலையான நெடுந்தீவு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான விபரம் யாது என்பதையும்;

(ii) கடந்த 08 வருடங்களாக அந்த வைத்தியசாலைக்கென இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமை காரணமாக நெடுந்தீவில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக நெடுந்தீவு வைத்தியசாலையில் காணப்படுகின்ற பதவியணி வெற்றிடங்கள் எத்திகதியில் நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

609/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1818 மற்றும் 1819 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஊவ – வெல்லஸ்ஸ போராட்டத்திற்கு ஹம்பாந்தோட்டை பிரதேசத்திலிருந்து தலைமைத்துவம் வழங்கிய வீரர்கள் பற்றிய தகவல்கள், தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தில் காணப்படாமை தொடர்பில் தங்கள் அமைச்சின் அலுவலர் ஒருவரினால் ஆய்வொன்று நடாத்தப்பட்டுள்ளது என்பதுடன் குறித்த ஆய்வின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீரர்கள் இராஜதுரோகிகளாக பெயரிடப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலாளர் மேற்படி வீரர்களை, தேசிய வீரர்களாக பெயரிடுவது பொருத்தமானதென முன்மொழிந்திருப்பது அப்போதைய தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் மேலதிகச் செயலாளரினால் நீதி அமைச்சின் மேலதிகச் செயலாளருக்கு (சட்டம்) அனுப்பப்பட்டுள்ள 2020.01.14 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

660/2020

கௌரவ சாந்த பண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் எனுமொரு நிறுவனம் இலங்கையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் யாவை;

(ii) புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் குருநாகல் பிராந்திய அலுவலகத்தினால் 2019 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள அகழ்வு உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி உரிமப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

731/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் நிலவுகின்ற வறட்சி காலநிலை மாறி மீள மழை பெய்யத் தொடங்கியதும் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் இதுவரை டெங்கு நோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) டெங்கு நுளம்புக் குடம்பிகளை ஒழிப்பதற்கு 2008/2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அரசாங்கத்தினால் B.T.I பக்றீரியாவை கியூபாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பலவேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கான சாத்தியம் தொடர்பாக ஆய்வு நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கு சாத்தியம் இல்லாத பட்சத்தில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) B.T.I பக்றீரியாவுக்குப் பதிலாக டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய மாற்றுவழி என்ன என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

745/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்னேவ பொலிஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை மேற்படி கட்டிடங்கள் போதுமான வகையில் சீரமைக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் எத்திகதியில் சீரமைக்கப்படுமென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

849/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “எழுச்சிபெறும் பொலனறுவை" மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கதுருவெல மாற்று வீதியின் கி.மீ 0 + 000 முதல் கி.மீ. 2 + 687 வரையிலான பகுதியை, நான்கு ஒழுங்குகளைக் கொண்ட வீதியாக விரிவாக்கும் பொருட்டு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கும், அரச விதை நெல் உற்பத்திப் பண்ணைக்கும் சொந்தமான மற்றும் பிரதேசவாசிகளினால் பயன்படுத்தப்பட்ட மேட்டு நிலங்கள், சேற்று நிலங்கள், தரிசு நிலங்கள், வீட்டுத் தோட்டக் காணிகள் மற்றும் நிலையான கட்டிடங்களைக் கொண்ட காணிகள் என்பன அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஒவ்வொரு காணி உரிமையாளர்களுக்கும் அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட வீதிப் பகுதியை விரிவாக்கும் திட்டத்தின் கீழ் தற்போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

874/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பாகிஸ்தான், நேபாளம், பங்காளதேசம், மாலைதீவு மற்றும் மியன்மார் ஆகியவற்றை உள்ளிட்ட 80 நாடுகள் கொவிட் - 19 தொற்றின் பொருளாதாரத் தாக்கத்தை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) அவசர உதவிகளைப் பெற்றிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம், கொவிட் - 19 தொற்று காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைக் கோரியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கோரப்பட்டுள்ள உதவியின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட உதவி கோரப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம் பதிலளித்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சர்வதேச நாணய நிதியத்தின் பதிலையும்;

(vi) இதுவரை நிவாரணத்தைப் பெற்ற 80 நாடுகள் போலல்லாது இலங்கை அரசாங்கம் நிவாரணத்தைப் பெற்றிருக்காமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1063/2020

கௌரவ அசோக பிரியந்த,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் யானை – மனித மோதல் இடம்பெறுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளில் சஞ்சரிக்கின்ற காட்டு யானைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளை விரட்டுவதற்காக இருக்கின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி காட்டு யானைகளை விரட்டுவதற்கான அலுவலர்களின் பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

48/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள கெசினோ அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அந்த ஒவ்வொரு அனுமதிப்பத்திரமுடையவர்களின்;

(i) பெயர்கள்;

(ii) முகவரிகள்;

(iii) அனுமதிப்பத்திர இலக்கங்கள்;

(iv) அனுமதிப்பத்திரம் முதற் தடவையாக வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது வருடம் ;

(v) அக்கெசினோ நிலையங்கள் நடாத்திச் செல்லப்படும் இடங்களின் முகவரிகள்;

வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) புதிய கெசினோ அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்காக இதுவரையில் விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

198/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் இன்றளவில் பேணப்பட்டுவரும் அமைச்சுக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அமைச்சுக்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பன தனித்தனியாக யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு அமைச்சினையும் பேணிச் செல்வதற்காக செலுத்தப்படும் வாடகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அரசாங்க அமைச்சுக்களை பேணிச் செல்வதற்காக அதிக வாடகை செலுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் கருத்து யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

300/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடுவலை நகரத்தில் காணப்படுகின்ற அதிக வாகன நெரிசலைக் குறைப்பதற்கென அரசாங்கத்தினால் ஏதேனும் வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

354/2020

கௌரவ புத்திக பத்திறண, — சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அனைத்து நீர்வீழ்ச்சிகளும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு சட்டமயமாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு சட்டமயமாக்கப்படாத நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்வீழ்ச்சிகளை வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மனித செயற்பாடுகள் காரணமாக வற்றிப்போயுள்ள நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய மனித செயற்பாடுகள் யாவை என்பதையும்;

(iii) அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வற்றிப்போயுள்ள நீர்வீழ்ச்சிகளை மீண்டும் இயங்கு நிலைக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வற்றிப்போயுள்ள நீர்வீழ்ச்சிகளை மீண்டும் இயங்கு நிலைக்குக் கொண்டு வருவதற்கான முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

458/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரத்திலிருந்து குருநாகல் நகருக்கு செல்லக் கூடிய குறுகிய வழி புல்னேவ - பொல்பிதிகம பாதை என்பதையும்;

(ii) அப்பாதையானது தலாவை சந்தியிலிருந்து பொல்பிதிகம சந்தி வரையிலான பகுதி தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாதையின் மேற்படி பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

538/2020

கௌரவ ரோஹன பண்டார,— போக்குவரத்து அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் பொருட்டு “சிசுசெரிய” நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், இவ்விடயத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தினை அனுராதபுரம் மாவட்டத்திற்குள் விரிவாக்குவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

601/2020

கௌரவ உதயன கிரிந்திகொட,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை —

(i) கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு செலவிடப்பட வேண்டியுள்ள எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(v) கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முறைகேடுகள்/ தாமதங்கள் காரணமாக அதனை நிறைவுசெய்ய முடியுமென உத்தேசிக்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் —

(i) ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தாமதம் இடம்பெற்றுள்ள கம்பனிகளுக்கு அதன் நிர்மாணப் பணிகள் மீள வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கண்டி நகருக்கு அண்மித்த இறுதி நுழைவு காணப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) கண்டியிலிருந்து கலகெதர வரையான வீதியில் காணப்படுகின்ற கடுமையான வாகன நெரிசல் காரணமாக அதன் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு 30-45 நிமிடங்கள் வரை எடுப்பதால் கண்டி பிரதேச மக்களுக்கு இலகுவாக அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசிப்பதற்கு நுழைவு வீதி அமைக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அதிவேக நெடுஞ்சாலை நுழைவுகள் நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

661/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அலவ்வ நகரமானது, அபிவிருத்தித் திட்டமொன்றுக்கு ஏற்ப முறையாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அலவ்வ நகரத்தின் பொருட்டு நகர அபிவிருத்தித் திட்டமொன்று தயார்செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளின் அளவு யாது;

(iii) மேற்குறிப்பிட்ட நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

670/2020

கௌரவ நலின் பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் கீழ் உமா ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்படும் குளங்கள் மற்றும் கால்வாய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) அக்கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக பயிர் செய்யக்கூடிய மேட்டு மற்றும் சேற்று நிலங்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) எந்த நிதியங்களிலிருந்து மேற்படி தொகை பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

870/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்தையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அப்பாடசாலைகளில் தற்போது பணியாற்றும் அதிபர்களது கல்வித் தகைமைகள் மற்றும் அவர்கள் உரிய பாடசாலைகளில் அதிபர்களாக பணியாற்றும் காலப்பகுதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்காக உரிய தகைமைகளைக் கொண்ட அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

875/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கம் கடன் தவணை நீடிப்பு உள்ளிட்ட கடன் நிவாரணத்துக்காக ஏனைய அரசாங்கங்கள் மற்றும் பல்தரப்பு முகவராண்மைகள் போன்றவற்றிடமிருந்து பல கோரிக்கைகளை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இலங்கை அரசாங்கத்தால் கடன் தவணை நீடிப்பு உள்ளிட்ட கடன் நிவாரணத்துக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கைகளின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறித்த கோரிக்கைகளுக்கு பெறப்பட்ட பதில்களையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கத்துக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலுவை நன்கொடை வழங்கல்களையும்;

(ii) மேற்குறித்த நன்கொடை வழங்கல்களின் பெறுமதியையும்;

(iii) இலங்கை அரசாங்கம் மேற்குறிப்பிட்ட நன்கொடை வழங்கல்களை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

997/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிப் பாடநெறிகளை அண்மைக்காலத்தில் கற்று முடித்துள்ள டிப்ளோமாதாரிகளுக்கு இதுவரை ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக அண்மைக்காலம் முதல் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாகவும், பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் கல்வியியற் கல்லூரிகளின் பயிற்சிப் பாடநெறிகளை கற்று முடித்துள்ள மேற்படி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1080/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 05 வருட காலப்பகுதியில் பொலனறுவை மாவட்டத்தில் பதிவாகிய சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி காலப்பகுதியில் பொலனறுவை மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் மரணித்த நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) சிறுநீரக நோயினைத் தடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட, சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டத்தில் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும்;

(ii) குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்புத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி (ஆ) (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1280/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மிளகு அறுவடை மெட்ரிக் டொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதிகப்படியாக மிளகு அறுவடை செய்யும் மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்தின் வருடாந்த மிளகு அறுவடை மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிளகு தவிர்ந்த வேறு வகையான வாசனைத் திரவியங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாசனைத் திரவியத்தின் வருடாந்த தேவைப்பாடு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படுகின்ற வாசனைத் திரவியங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1283/2020

கௌரவ வருண லியனகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இனங்காணப்பட்டுள்ள, இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள உயர் அபாய நேர்வுமிக்க வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வீடுகளில் வசிக்கும், மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுகூலங்கள் உரித்தான குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட உயர் அபாய நேர்வுமிக்க வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அனுகூலங்களை வழங்குவதில் தாமதம் நிலவுவதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

67/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கமைய கழிவு முகாமைத்துவம் எனும் விடயம் மாகாண சபைகளின் கீழ் வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், மாகாண சபை முறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென பிரத்தியேகமான நிறுவனங்களை அமைத்துள்ள மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான விசேட நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளுக்கென விசேட நிறுவனத்தை அமைப்பது தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

199/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் காணப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவற்றில் தனியார் கட்டிடங்களில் அமைச்சுக்களை பேணிவரப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) அவற்றுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்களை அரசாங்க கட்டிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

242/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

355/2020

கௌரவ புத்திக பத்திறண, — நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிநீர் வழங்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள வாவிகளின் நீரின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) E-coli உள்ளிட்ட பல்வேறு கிருமிகள் கலந்துள்ளதால் இந்நீர் மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வாவிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாவிகளிலுள்ள நீரின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

519/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

543/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

671/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிங்கிரிய கிணியம நிர்ப்பாசனத் திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால பணிகளுக்குச் செலவாகும் நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதையும்;

(ii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

757/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) காட்டு யானைகளின் நடமாட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) காட்டு யானைகள் அதிகளவில் நடமாடும் தேசிய வனப் பூங்காக்கள் மற்றும் வன ஒதுக்கங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) யானை கொரிடோக்கள் இருப்பின், அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) யானை கொரிடோக்களுக்கு குறுக்கே கிராமங்கள் அல்லது மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை மாவட்டத்தில் யானை - மனிதன் மோதல் காரணமாக —

(i) உயிரிழந்த ஆட்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையானது வருட வாரியாக எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு நபர் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாவட்டத்தில் யானை - மனிதன் மோதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

803/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி / வட்டக்கச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் பொருட்டு புதிய கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமை காரணமாக கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் பணிகள் இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிய அமைச்சு யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை முழுமையாக நிர்மாணிப்பதற்குத் தேவையான தொகை எவ்வளவு;

(ii) அதற்கென நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக அதனை வழங்க எடுக்கும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

871/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் மனித வளம் மற்றும் அந்த டிப்போக்களில் காணப்படும் பேரூந்துத் தொகுதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

876/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கம் கடன் மீளச்செலுத்துதல் தொடர்பாக சுதந்திரம் அடைந்ததிலிருந்து கறைபடாத வரலாற்றை பேணி வந்ததாக மீண்டும் மீண்டும் கூறியதையும்;

(ii) இலங்கையின் மீளச்செலுத்தும் இயலுமையை மூடீஸ் கடன் தரப்படுத்தும் முகவராண்மை B2 இலிருந்து Caa1 வரை இரு மட்டங்களால் தரவிறக்கம் செய்துள்ளமையையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையின் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வட்டி மற்றும் கடன்தீர்ப்புக் கொடுப்பனவுகளின் மொத்தப்பெறுமதியையும்;

(ii) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட மொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையின் பெறுமதியையும்;

(iii) 2020 ஆம் ஆண்டுக்கான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான அரசாங்கத்தின் வருமானத்தையும்;

(iv) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட மொத்த வருமானத்தின் பெறுமதியையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தவணைத் தவறுகையை தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் கடனை மீளச்செலுத்தத் தவறுமாயின் இலங்கையின் பொருளாதாரம் மீதான தாக்கத்தையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

881/2020

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மீன் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) அத்தேவையில் உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 1982 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட மீன் உற்பத்தியானது இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த நிலைமை முடிவடைந்து தற்போது 11 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் 1982 ஆம் ஆண்டு அம்மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மீன் அறுவடை இன்னும் கிடைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் இதுவரை மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) கடந்த 15 வருட காலப்பகுதியில் ஏனைய மாகாணங்களில் நிர்மாணிக்கப் பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்திற்கான நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த உதவியின் தன்மை மற்றும் அந்த உதவிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் வழங்கும் கடன் தொகைகளைக் கொண்டு இத்துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) அதன்மூலம் கிடைக்கப்படும் மேலதிக அனுகூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

934/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லியவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 22 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கும் அஞ்சல் அலுவலகம் தற்காலிக கட்டிடமொன்றில் இயங்கி வருகின்றதென்பதையும்;

(ii) இதற்கென 20,000/- ரூபா மாதாந்த வாடகை செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணித்துத் தருமாறு மக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முல்லியவளை பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்காக தரமான அஞ்சல் சேவையை வழங்குவதற்கு மேற்படி அஞ்சல் அலுவலத்திற்கென நிரந்தர கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கட்டிடம் எப்போது நிர்மாணிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1081/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 30 மற்றும் 60 அம்பியர் மூன்று படி நிறுவுகை மின் இணைப்பை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது இதுவரையில் பட்டயப் பொறியியலாளர் வழங்கும் இணக்க சோதனை அறிக்கையொன்று கோரப்படவில்லை என்பதையும்;

(ii) எனினும், அண்மைக்காலமாக அதற்கென பட்டயப் பொறியியலாளர் வழங்கும் இணக்க சோதனை அறிக்கையொன்று கோரப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி இணக்க சோதனை அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 25,000/-இற்கும் மேலதிகமாக செலவு செய்ய வேண்டியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) 30 மற்றும் 60 அம்பியர் மூன்று படி நிறுவுகை மின் இணைப்பை பெறுவதற்காக விண்ணப்பிக்கும்போது இணக்க சோதனை அறிக்கை கோரப்படுகின்ற முறையை அகற்றுவதற்கோ அல்லது அதற்கென சலுகை வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1083/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கிழக்கு நாடுகளில் பேணப்பட்டு வருகின்ற இலங்கைத் தூதரகங்களின் கீழ் பாதுகாப்பு இல்லங்கள் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு இல்லங்களில் இட வசதிகள் போதுமானதாக இல்லையென்பதையும்;

(iii) அதன் காரணமாக பாதுகாப்புக் கருதி குறித்த இல்லங்களுக்கு வருகைதரும் வீட்டுப் பணிப் பெண்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகின்றனர் என்தையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த ஒவ்வொரு பாதுகாப்பு இல்லத்திலும் தற்போது தங்கியுள்ள இலங்கை வீட்டுப் பணிப்பெண்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பணிப் பெண்களை இலங்கைக்கு மீண்டும் அழைத்து வருவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?